ஈணெருமையின் கழுத்தில் இட்டபொட்ட ணங்கள்போல்
மூணுநாலு சீலையில் முடிந்தவழ்க்கும் மூடர்காள், 151
மூணுநாலு லோகமும் முடிவிலாத மூர்த்தியை
ஊணிஊணி நீர்முடித்த உண்மைஎன்ன உண்மையே?

சாவல்நாலு குஞ்சதஞ்சு தாயதான வாறுபோல்
காவலான கூட்டிலே கலந்துசண்டை கொள்ளுதே! 152
கூவமான் கிழநரியக் கூட்டிலே புகுந்தபின்
சாவல்நாலும் குஞ்சதஞ்சும் தான் இறந்து போனவே!

மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரையை
காலமே எழுந்திருந்து நாலுகட்டு அறுப்பீரேல் 153
பாலனாகி வாழலாம் பரப்பிரமம் ஆகலாம்;
ஆலம்உண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே!

செம்பினில் களிம்புவந்த சீதரங்கள் போலவே
அம்பினில் எழுதொணாத அணியரங்க சோதியை 154
வெம்பிவெம்பி வெம்பியே மெலிந்துமேல் கலந்திட
செம்பினில் களிம்புவிட்ட சேதிஏது காணுமே!

அணி அரங்கம் - அழகிய சிற்றம்பலம்

நாடிநாடி நம்முளே நயந்துகாண வல்லீரேல் 155
ஓடிஓடி மீளுவான் உம்முளே அடங்கிடும்
தேடிவந்த காலனும் திகைத்திருந்து போய்விடும்
கோடிகோடி காலமும் குறைவிலாது இருப்பிரே!

பிணங்குகின்றது ஏதடா? பிரக்ஞைகெட்ட மூடரே?
பிணங்கிலாத பேரொளி பிராணனை அறிகிலீர். 156
பிணங்கும்ஓர் இருவினைப் பிணக்கறுக்க வல்லீரேல்!
பிணங்கிலாத பெரியஇன்பம் பெற்றிருக்க லாகுமே!

மீன்இறைச்சி தின்றதில்லை அன்றும்இன்றும் வேதியர்? 157
மீன்இருக்கும் நீரலோ மூழ்வதும் குடிப்பதும்

மான்இறைச்சி தின்றதில்லை அன்றும்இன்றும் வேதியர்,
மான்உரித்த தோலலோ மார்புநூல் அணிவதும்.

ஆட்டிறைச்சி தின்றதில்லை அன்றும்இன்றும் வேதியர்
ஆட்டிறைச்சி அல்லவோ யாகம்நீங்கள் ஆற்றலோ?
மாட்டிறைச்சி தின்றதில்லை அன்றும்இன்றும் வேதியர் 158
மாட்டிறைச்சி அல்லவோ மரக்கறிக் கிடுவது?

அக்கிடீர் அனைத்துயிர்க்கும் ஆதியாகி நிற்பது
முக்கிடீர் உமைப்பிடித்து முத்தரித்து விட்டது,
மைக்கிடீர் பிறந்துஇறந்து மாண்டுமாண்டு போவது, 159
மொக்கிடீர் உமக்குநான் உணர்த்துவித்தது உண்மையே.

ஐயன்வந்து மெய்யகம் புகுந்தவாறது எங்ஙனே?
செய்யதெங்கு இளங்குரும்பை நீர்புகுந்த வண்ணமே.
ஐயன்வந்து மெய்யகம்புகுந்து கோயில் கொண்டபின் 160
வையகத்தில் மாந்தரோடு வாய்திறப்பது இல்லையே!

நவ்வுமவ்வை யும்கடந்து நாடொணாத சியின்மேல்
வவ்வுயவ்வு ளும்சிறந்த வண்மைஞான போதகம்
ஒவ்வுசத்தி யுள்நிறைந்து உச்சியூ டுருவியே 161
இவ்வகை அறிந்தபேர்கள் ஈசன்ஆணை ஈசனே.

அக்கரம் அனாதியோ? ஆத்துமம் அனாதியோ?
புக்கிருந்த பூதமும் புலன்களும் அனாதியோ?
தர்க்கமிக்க நூல்களும் சாத்திரம் அனாதியோ? 162
தற்பரத்தை ஊடறுத்த சற்குரு அனாதியோ?

பார்த்ததேது? பார்த்திடில் பார்வையூ டழிந்திடும்
கூர்த்ததாய் இருப்பிரேல் குறிப்பில்அச் சிவமதாம்;
பார்த்தபார்த்த போதெல்லாம் பார்வையும் இகந்துநீர் 163
பூத்தபூவுங் காயுமாய் பொருந்துவீர் பிறப்பிரே.

நெற்றிபற்றி உழலுகின்ற நீலமா விளக்கினைப்
பத்திஒத்தி நின்றுநின்று பற்றறுத்தது என்பலன் 164
உற்றிருநது பாரடா, உள்ஒளிக்கு மேல்ஒளி

அத்தனார் அமர்ந்திடம் அரிந்தவன் அனாதியே.

நீரைஅள்ளி நீரில்விட்டு நீர்நினைந்த காரியம்
ஆரைஉன்னி நீரெல்லாம் அவத்திலே இறைக்கிறீர்? 165
வேரைஉன்னி வித்தைஉன்னி வித்திலே முளைத்தெழும்
சீரைஉன்ன வல்லீரேல் சிவபதங்கள் சேரலாம்!

நெற்றியில் தயங்குகின்ற நீலமாம் விளக்கினை
உய்த்துணர்ந்து பாரடா, உள்ளிருந்த சோதியைப்
பத்தியில் தொடர்ந்தவர் பரமயம் அதானவர் 166
அத்தலத்தில் இருந்தபேர்கள் அவர்எனக்கு நாதரே.

கருத்தரிக்கு முன்னெலாம் காயம்நின்றது எவ்விடம்?
உருத்தரிக்கு முன்னெலாம் உயிர்ப்புநின்றது எவ்விடம்? 167
அருள்தரிக்கு முன்னெலாம் ஆசைநின்றது எவ்விடம்?
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயம்என்று கூறுவீர்.

கருத்தரிக்கு முன்னெலாம் காயம்நின்றது தேயுவில்,
உருத்தரிக்கு முன்னெலாம் காயம்நின்ற தேயுவில் 168
அருள்தரிக்கு முன்னெலாம் ஆசைநின்றது வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர்.

திருக்கு - சந்தேகம்

தாதரான தாதரும் தலத்தில்உள்ள சைவரும் 169
கூதரைப் பறைச்சிமக்கள் கூடிசெய்த காரியம்
வீதிபோகும் ஞானியை விரைந்துகல் எறிந்ததும்
பாதகங்கள் ஆகவே பலித்ததே சிவாயமே.

ஓடிஓடி பாவிழைத்து உள்ளங்கால் வெளுத்ததும்
பாவியான பூனைவந்து பாலிலே குதித்ததும்
பணிக்கன்வந்து பார்த்ததும் பாரம்இல்லை என்றதும் 170
இழைஅறுந்து போனதும் என்னமாயம் ஈசனே?

சதுரம்நாலு மறையும்எட்டு தானதங்கி மூன்றுமே 171
எதிரதான வாயுவாறு என்னும்வட்ட மேவியே.

உதிரதான வரைகள்எட்டும் எண்ணும்என் சிரசின்மேல்
கதிரதான காயகத்தில் கலந்தெழுந்த நாதமே.

நாலொடாறு பத்துமேல் நாலுமூன்றும் இட்டபின்
மேலுபத்து மாறுடன் மேதிரண்ட தொன்றுமே 172
கோலிஅஞ் செழுத்துளே குருஇருந்து கூறிடில்
தோலுமேனி நாதமாய்த் தோற்றிநின்ற கோசமே.

கோசமாய் எழுந்ததும் கூடுருவி நின்றதும்
தேசமாய்ப் பிறந்ததும் சிவாயம்அஞ் செழுத்துமே
ஈசனார் அருந்திட அனேகனேக மந்திரம் 173
ஆசயம் நிறைந்துநின்ற ஐம்பத்தோர் எழுத்துமே.

அங்கலிங்க பீடமாய் ஐயிரண்டு எழுத்திலும்
பொங்குதா மரையினும் பொருந்துவார் அகத்தினும்
பங்குகொண்ட சோதியும் பரந்தஅஞ்சு எழுத்துமே 174
சிங்கநாத ஓசையும் சிவாயம் அல்லது இல்லையே.

உவமையிலாப் பேரொளிக்குள் உருவமானது எவ்விடம்?
உவமையாகி அண்டத்தில் உருவிநின்றது எவ்விடம்?
தவமதான பரமனார் தரித்துநின்றது எவ்விடம்? 175
தற்பரத்தில் சலம்பிறந்து தங்கிநின்றது எவ்விடம்?

ககமாக எருதுமூன்று கன்றைஈன்றது எவ்விடம்?
சொல்லுகீழு லோகம்ஏழும் நின்றவாறது எவ்விடம்?
அவனும்அவளும் ஆடலால் அருஞ்சிவன் பிறந்ததே, 176
அவள்தான் மேருவும் அவமைதானது எவ்விடம்?

உதிக்கநின்றது எவ்விடம்? ஒடுங்குகின்றது எவ்விடம்?
கதிக்கநின்றது எவ்விடம்? கண்ணுறக்கம் எவ்விடம்?
மதிக்கநின்றது எவ்விடம்? மதிமயக்கம் எவ்விடம்? 177
விதிக்கவல்ல ஞானிகள், விரிந்துரைக்க வேணுமே.

திரும்பியாடு வாசல்எட்டு திறம்உரைத்த வாசல்எட்டு,
மருங்கிலாத கோலம்எட்டு வன்னியாடு வாசல்எட்டு, 178
துரும்பிலாத கோலம்எட்டு சுற்றிவந்த மருளரே!

அரும்பிலாத பூவும்உண்டு ஐயன்ஆணை உண்மையே!

தானிருந்து மூலஅங்கி தணல்எழுப்பி வாயுவால்
தேனிருந்து அறைதிறந்து தித்திஒன்று ஒத்ததே 179
வானிருந்து மதியமூன்று தண்டலம் புகுந்தபின்
ஊனிருந்து அளவுகொண்ட யோகிநல்ல யோகியே!

முத்தனாய் நினைந்தபோது முடிந்தஅண்டத் துச்சிமேல்
பத்தனாரும் அம்மையும் பரிந்துஆடல் ஆடினார், 180
சித்தரான ஞானிகள், தில்லைஆடல் என்பீர்காள்!
அத்தன்ஆடல் உற்றபோது அடங்கல்ஆடல் உற்றவே.

ஒன்றும்ஒன்றும் ஒன்றுமே உலகனைத்தும் ஒன்றுமே
அன்றும்இன்றும் ஒன்றுமே அனாதியானது ஒன்றுமே 181
கன்றல்நின்ற செம்பொனைக் களிம்பறுத்து நாட்டினால்
அன்றுதெய்வம் உம்முளே அரிந்ததே சிவாயமே.

நட்டதா வரங்களும் நவின்ற சாத்திரங்களும்
இட்டமானது ஓமகுண்டம் இசைந்தநாலு வேதமும் 182
கட்டிவைத்த புத்தகம் கடும்பிதற்று இதற்கெலாம்
பொட்டதாய் முடிந்ததே பிரானையான் அறியவே.

வட்டமான கூட்டிலே வளர்ந்தெழுந்த அம்புலி
சட்டசமீ பத்திலே சங்குசக் கரங்களாய் 183
விட்டதுஅச்சு வாசலில் கதவினால் அடைத்தபின்
முட்டையில் எழுந்தசிவன் விட்டவாறது எங்ஙனே?

கோயில்பள்ளி ஏதடா? குறித்துநின்றது ஏதடா?
வாயினால் தொழுதுநின்ற மந்திரங்கள் ஏதடா? 184
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே.

நல்லவெள்ளி ஆறதாய் நயந்தசெம்பு நாலதாய்
கொல்லுநாகம் மூன்றதாய் குலாவுசெம்பொனி ரண்டதாய் 185
வில்லின்ஓசை ஒன்றுடன் விளங்கஊத வல்லீரேல்
எல்லைஒத்த சோதியானை எட்டுமாற்ற லாகுமே.

மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகள்;
வனத்தகத்து இருக்கினும் மனத்தகத்து அழுக்கறார்; 186
மனத்தகத்து அழுக்கறுத்த மவினஞான யோகிகள்
பிணத்தடத்து இருக்கினும் பிறப்பறுத்து இருப்பரே!

உருவும்அல்ல ஒளியும் அல்ல ஒன்றதாகி நின்றதே
மருவும்அல்ல கந்தம்அல்ல மந்தநாடி உற்றதல்ல 187
பெரியதல்ல சிறியதல்ல பேசும்ஆவி தானும்அல்ல
அரியதாக நின்றநேர்மை யாவர்காண வல்லிரே.

ஓரெழுத்து உலகெலாம் உதித்த அட்சரத்துளே
ஈரெழுத்து இயம்புகின்ற இன்பமேது அறிகிலீர் 188
மூவெழுத்து மூவராய் மூண்டெழுந்த மூர்த்தியை
நாலெழுத்து நாவிலே நவின்றதே சிவாயமே.

ஆதிஅந்த மூலவிந்து நாதம்ஐந்து பூதமாய்
ஆதிஅந்த மூலவிந்து நாதம்ஐந் தெழுத்துமாய் 189
ஆதிஅந்த மூலவிந்து நாதம்மேவி நின்றதும்
ஆதிஅந்த மூலவிந்து நாதமே சிவாயமே.

அன்னம்இட்ட பேரெலாம் அனேககோடி வாழவே
சொன்னமிட்ட பேரெலாம் துரைத்தனங்கள் பண்ணலாம் 190
விண்ணம்இட்ட பேரேலாம் வீழ்வர்வெந் நரகிலே
கன்னம்இட்ட பேரெலாம் கடந்துநின்றல் திண்ணமே!

ஓதொணாமல் நின்றநீர் உறக்கம்ஊணும் அற்றநீர்
சாதிபேதம் அற்றநீர் சங்கையின்றி நின்ற நீர் 191
கோதிலாத அறிவிலே குறிப்புணர்ந்து நின்றநீர்
ஏதும்இன்றி நின்றநீர் இயங்குமாறு எங்ஙனே?

பிறந்தபொது கோவணம் இலங்குநூல் குடுமியும்
பிறந்ததுடன் பிறந்ததோ, பிறங்குநூலி உடங்கெலாம் 192
மறந்தநாலு வேதமும் மனத்துளே உதித்ததோ?
நிலம்பிளந்து வான்இடிந்து நின்றதுஎன்ன வல்லீரே?

துருத்தியுண்டு கொல்லனுண்டு சொர்ணமான சோதியுண்டு
திருத்தமாம் மனத்தில்உன்னித் திகழஊத வல்லீரேல், 193
பெருத்ததூண் இலங்கியே பிழம்பதாய் விரிந்திடும்
நிருத்தமான சோதியும் நீயும்அல்லது இல்லையே.

வேடமிட்டு மின்துலக்கி மிக்கதூப தீபமாய்
ஆடறுத்து கூறுபோட்ட அவர்கள்போலும் பண்ணுறீர் 194
தேடிவத்த செம்பெலாம் திரள்படப் பரப்பியே
போடுகின்ற புட்பபூசை பூசைஎன்ன பூசையே?

முட்டுகண்ட தூமையின் முளைத்தெழுந்த சீவனை
கட்டிக்கொண்டு நின்றிடம் கடந்துநோக்க வல்லீரேல் 195
திட்டும்அற்று சுட்டும்அற்று முடியில்நின்ற நாதனை
எட்டுத்திக்கும் கையினால் இருந்தவீட தாகுமே.

அருக்கனோடு சோமனும் அதுக்கும் அப்புறத்திலே
நெருக்கிஏறு தாரகை நெருங்கிநின்ற நேர்மையை 196
உருக்கிஓர் எழுத்துமே ஒப்பிலாத வெளியிலே
இருக்கவல்ல பேரலோ இனிப்பிறப்பது இல்லையே.

அருக்கன் - சூரியன், சோமன் - சந்திரன்

மூலவட்டம் மீதிலே முளைத்தஅஞ்சு எழுத்தின்மேல்
கோலவட்டம் மூன்றுமாய் குலைந்தலைந்து நின்றநீர் 197
ஓலைவட்ட மன்றுளே நவின்றஞானம் ஆகிலோ
ஏலவட்டம் ஆகியே இருந்ததே சிவாயமே.

சுக்கிலத் திசையுளே சுரோணிதத்தின் வாசலுள்
முத்துசரம் எட்டுளே மூலாதார வறையிலே 198
அச்சமற்ற சவ்வுளே அரிஅரன் அயனுமாய்
உச்சரிக்கும் மந்திரம் உண்மையே சிவாயமே.

பூவும்நீரும் என்மனம் பொருந்துகோயில் என்உளம்
ஆவியோடி லிங்கமாய் அகண்டம்எங்கும் ஆகிலும் 199
மேவுகின்ற ஐவரும் விளங்குதூப தீபமாய்

ஆடுகின்ற கூத்தனுக்கோர் அந்திசந்தி இல்லையே.

உருக்கலந்த பின்னலோ உன்னைநான் அறிந்தது
இருக்கில்என், மறைக்கில்என் நினைந்திருந்த போதெலாம்
உருக்கலந்து நின்றபோது நீயும்நானும் ஒன்றலோ? 200
திருக்கலந்து போதலோ தெளிந்ததே சிவாயமே.